**நாவுல பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 23 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாவுல பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நுலகத்தின் புத்தகங்களுக்கான மீதி ரூபா. 67,762 ஆக குறைந்து காணப்பட்டது. | குறைவாக காணப்படும் மீதி கணக்குகள் சீர் செய்யப்பட வேண்டும் | கணக்காய்வு மூலம் காட்டப்பட்டிருக்கும் விடயங்களை ஏற்றுக் கொள்கிறேன். இனிவரும் காலங்களில் அக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வேன் என்பதை அறிய தருகிறேன் |
| (ஆ) | ஒப்பந்தத்திற்கமைய கடைகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா. 451,957 ஐ நிதி அறிக்கைகளில் சேமிக்கப்படடிருப்பதாக குறிப்பிடபட்டிருக்கவில்லை | ஒதுக்கப்பட்ட தொகை நிதி அறிக்கைகளில் சரியாக காண்பிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு மூலம் காட்டப்பட்டிருக்கும் விடயங்களை ஏற்றுக் கொள்கிறேன். இத் தொகை பல வருடங்களுக்கு முன் தோன்றிய ஒப்பந்தங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை என்பதை தெறிவித்துக் கொள்கிறேன் |

| | | |
|---|---|---|
| (இ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மொத்த தொகை ரூபா. 59,660 உடைய வானொலி இயந்திரம் ஒன்றும் 24 அங்குல தொலைக்காட்சி ஒன்றும் மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். | கணக்காய்வு மூலம் காட்டப்பட்டிருக்கும் விடயங்களை ஏற்றுக் கொள்கிறேன். இனிவரும் காலங்களில் கணக்கை தயார் செய்யும் போது சொத்துக்களின் அடிப்படையில் கணக்கிலிடப்பட நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மொத்த தொகை ரூபா. 3,717,142 ஐ உடைய 4 கணக்குப் பிரிவுகளுக்கு சம்மந்தப்பட்ட மீதிகளுக்கும் அம் மீதிகளுடன் சம்மந்தப்பட்ட தேவையான ஆவணங்கள் மற்றும் தரவுகள் மூலம் காட்டப்பட்டிருக்கும் மீதிகளுக்குமிடையிலான கூட்டுத்தொகையான ரூபா. 1,190,774 இல் குறைபாடுகள் காணப்படுகின்றன. | மீதிகளின் குறைபாடுகளை தீர்த்து கணக்குகளை சீர் செய்ய நடவடிகடகை எடுப்பேன். | வரிப்பணம் குத்துகை மற்றும் ஊழியர் பிணை முதலீடுகள் தொடர்பான கணக்காய்வுகள் மூலம் காட்டப்பட்டிருக்கும் விடயங்களை ஏற்றுக் கொள்கிறேன். கடை வாடகைகளின் சரியான மீதி ரூபா. 378,735 எனவும் ஆயர்வேத தொகை ரூபா. 151,765 எனவும் தெரிவித்துக்கொள்கிறேன |

### 1.3.3 பெற வேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாத மீதி ரூபா. 1,961,503 ஆகும் | பேற வேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும | நிலுவைத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | | |
|---|---|---|
| 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாத மீதி ரூபா. 114,270 ஆகும். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இம் மீதிகளுள் மீண்டும் செலுத்தப்படாத வாசிகசாலை பிணை சேமிக்கப்பட்ட தொகை மற்றும் ஆபத்தான திட்டங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பிணை சேமிப்புத் தொகை அடங்கும். |

**1.3.4 நிதிக்கூற்றுக்களுக்காக தேவைப்படும் எழுத்து மூலமான சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா. 35,168,530 பெறுமதியான கணக்குப் பிரிவுகள் 3 இற்கு சம்மந்தப்பட்ட தேவையான பிரதி ஆவணங்கள் மற்றும் மதிப்பாய்வு அறிக்கையை சமர்ப்பிக்க தவரியதால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சரிபார்க்க முடியவில்லை | நிலுவையாக இருந்த வரித்தொகை மற்றும் குத்துகைக்கான பிரதி ஆவணங்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். | கணணி மென் பொருளை கொண்டு பெற்றுக்கொண்ட தகவல்கள் மூலமாக மீதிகளை பெற்றுக்கொண்டுள்ளதோடு இது வரையில் மீத வரிப்பதிவேடு சமப்படுத்தப்படுகிறது. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) | | | |
| (i) 217 விதி | காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீ.எஸ் 46 வடிவமைப்பிற்கேற்ப ஆவனமொன்று புதுப்பிக்கப்பட்டிருக்க வில்லை | சபைக்கு சொந்தமான சொத்துக்களை மதிப்பாய்வு செய்து ஆவணங்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இந்த குறைகளை சீர்செய்வதற்காக நடவடிக்கைகள் எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 218 விதி | சபைக்கு சொந்தமான அனைத்துக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் தெருக்கள், கல்லறைகள்இ விளையாட்டு மைதானங்கள், பொதுக் கிணறுகள், குளாய் கிணறுகள் மற்றும் வாகனங்கள் தொடர்பான மதிப்பாய்வொன்று செய்யப்படவில்லை. | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் தொடர்பான மதிப்பாய்வொன்று செய்து ஆவணங்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். | இது வரையில் சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான மதிப்பாய்வொன்று செய்யப்படுகிறது. |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை யின் 3.1 பந்தி | சுபைக்கு சொந்தமான 3 வாகனங்களின் எரிபொருள் தகன பரிசோதணை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக் கு அமைய எரிபொருள் தகன பரிசோதணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | எரிபொருள் தகன பரிசோதணை ஒன்றை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன். |
| (இ) | 2016 மார்ச் 17 அன்று இலக்கம் 2016/3 இல் வசிக்கும் மத்திய மாகாண கொமசாரிஸ் அவர்களின் சுற்றரிக்கையின் 4 ஆம் கட்டுரை | மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ளாமல் 2013 மே 31 அன்று மகா சபை தீர்மானம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு சபைக்கு சொந்தமான கடைகள் 48 இற்கான மாதாந்த வாடகையாக ரூபா.2,000 வீதம் அறவிடப்பட்டுக்கொண்டிருந்தது. | மதிப்பீட்டு அறிக்கைக்கு அமைவாக வாடகை அறவிடப்பட வேண்டும். | இது வரையில் மதிப்பீட்டு திணைக்கலத்திடமிருந்து புதிய மதிப்பீடு கிடைக்கப்பெற்றுள்ளதால் இனி வரும் காலங்களில் புதிய மதிபடபீட்டின்படி வாடகை அறவிடப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,372,332 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,341,726 ஆக இருந்தது

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ( வீதவரியும் வரியும | 1,787,000 | 1,655,539 | 1,488,252 | 1,571,488 | 1,787,000 | 1,655,539 | 1,356,726 | 1,416,942 |
| (ii) | வாடகை | 2,010,000 | 892,000 | 2,182,720 | 287,295 | 2,021,800 | 929,550 | 2,000,582 | 260,195 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,010,000 | - | 1,143,740 | - | 1,252,500 | - | 1,291,040 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 7,053,000 | - | 3,003,690 | 192,853 | 4,880,000 | 1,734,823 | 5,079,887 | 227,636 |
| | | 11,860,000 | 2,547,539 | 7,818,402 | 2,051,636 | 9,941,300 | 4,319,912 | 9,728,235 | 1,904,773 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட வரிப்பணம் ரூபா. 943,006 ஆனது தொழிநுட்ப கோளாறு காரணமாக உயர்த்தப்பட்டிருந்த போதிலும் அதை தீர்ப்பதற்கான எந்தவொறு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | தொழிநுட்ப கோளாறு சரி செய்யப்பட வேண்டும். | வரிப்பணம் தொழிநுட்ப கோளாறு காரணமாக உயர் கட்டணமானதால் அதை நிவர்த்தி செய்யும் முகமாக பல வருடகாலமான ஆவணங்கள் சமப்படுத்தப்பட்டு வருகிறது. |

### 2.2.3 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நுாஉல சந்தை பூமியில் நீண்ட காலமாக மூடப்பட்டிருந்த 6 கடைகளில் மற்றும் பொதுச் சந்தையில் அமைந்திருக்கும் 4 கடைகளில் ரூபா. 339,425 நிலுவை மீதி அறவிடப்படாது காணப்பட்டது. | நிலுவைத்தொகை அறவிடப்பட வேண்டும். | இந்த நிலுவைத்தொகையில் ரூபா. 181,390 கணக்கிலிருந்து வெட்டப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் எஞ்சியிருக்கும் நிலுவை மீதி எதிர்காலத்தில் அறவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன். |

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசெம்பர் 31 அன்று கிடைக்க வேண்டிய கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா. 438,660 மற்றும் முத்திரைப்பணம் ரூபா. 4,692,860 ஆக இருந்தது | நிலுவைப்பணம் ஒதுக்கப்பட வேண்டும். | இது வரையில் ரூபா. 411,785 தொகையானது கிடைக்கப்பெற்றுள்ளதோடு முத்திரை வருமானத்தையும் கொண்டுவர நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு உரித்தான பிரதேசத்தில் ஒரு நாளுக்கு சேரும் மெற்றிக் தொன் 1½ இற்கும் 2 இற்கும் இடைப்பட்ட அளவிலான கழிவினை அகற்ற ஒழுங்கான முறையொன்றை கையாழாது 2 ஏக்கர் 3 ரூட் பரப்புடைய கைப்பற்றப்படாத சேருதண்டாபொல எனும் இடத்தில் கொட்டப்படடிருந்தது. | தினமும் சேரும் உக்கலடையும் மற்றும் உக்கலடையாத கழிவுகளை சூழலுக்கு பாதகமான வகையில் அகற்றப்படாது முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ்விடத்தை சபையினால் கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் தம்புள்ள மாநகர சபையினால் ஆலோசிக்கப்பட்ட கவஷிமா கொம்போஸ்ட் செயற்திட்டம் தொடர்பாக தற்போது சேகரிக்கப்படும் உக்கலடையும் மற்றும் உக்கலடையாத கழிவுகளின் அளவை உபயோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மீள்சுழற்சிக்கு உட்படுத்த முடியுமான கழிவகளை இயன்றளவு களங்சியப்படுத்தலை மேற்கொள்வேன். |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| | | |
|---|---|---|
| பிரதேச சபையினால் நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கு 2018 ஆம் ஆண்டு செலவு பிரிவுகளின் அடிப்படையில் மானியமாக ரூபா. 270,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கான வேலை திட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை. | நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கு 2018 ஆம் ஆண்டு அறவிடப்பட்ட மானியங்களின் அடிப்படையில் நடைபெற்றிருக்கவில்லையெனினும் நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடிப்படையாகக்கொண்ட இன்னும் வெவ்வேறு வேலை திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையில் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் 16 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமையாளர் உதவியாளர் ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பித்தருமாறு எழுத்து மூலம் கேராப்பட்டுள்ளது. |
| (ஆ) | சேவையிலிருந்து நீக்கப்பட்ட முன்னால் செயலாளரிடமிருந்து 2012 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்படாது காணப்படும் ஊழியர் கடன் மீதியான ரூபா. 199,920 ஐ அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதியை அறவிட தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2012 ஆம் ஆண்டு இடைநிறுத்ததிற்கு உட்பட்ட உத்தியோகத்தர் ஒருவருடைய கடன் மீதி அறவிடுவதற்காக எழுத்து மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் செயற்படாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்யாதிருத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டு வரும் கட்டிடங்கள் அமைந்துள்ள 21 | ஊரிமைகள் கைப்பற்றப்பட்டு ஆவணமாக்கப்பட்டு | இது வரையில் மதிப்பாய்வு சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கும்போது |

| | | |
|---|---|---|
| இடங்கள் மற்றும் மயாண பூமிகளுக்கான உரிமை உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. | பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். | சபைக்கு சொந்தமான இடங்கள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக சொத்து மதிப்பாய்வு நடைபெற்றக்கொண்டிருக்கும் நிலையில் உரிமையை உறுதி செய்ததன் பின் அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு சபையின் பக்கம் கைப்பற்றப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன். |

### 3.3.2 செயலற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மொரகஹகந்த பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தினுள் அமைந்திருப்பதன் காரணமாக மூடப்பட்டிருந்த பொது நூலகத்தில் 20 பொருளிருப்பு உருப்படிகளும் 5941 வெவ்வேறு வகையான புத்தகங்கள் அந்த கட்டிடத்தினுள் பயன்படுத்தப்படாது களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தன. | பொருளிருப்பு பொருட்கள் மற்றும் புத்தகங்களின் பாதுகாப்பை உறதி செய்தல் மற்றும் அவற்றை பிரயோசனமாக பயன்படுத்தல் வேண்டும். | மொரகஹகந்த செயற்திட்டத்தில் நிலையான அல்லது தற்காலிகமாக கட்டிடமொன்று கிடைக்குமிடத்து பொருளிருப்பு பொருட்களை உபயோகிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஆ) | மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் கிடைத்த ரூபா. 250,000 ஆகிய மானிய தொகையின் பேரில் செயற்படுத்தப்பட்டிருந்த கினிஹிரிகந்த நீர் வழங்கல் செயற்திட்டம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முழுமையாக நீரை விநியோகிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவில் நீர் வழங்கல் திட்டத்தை செயற்படுத்தி நீரை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2016 மற்றும் 2017 வருடங்களில் கிடைத்த மானிய தொகையை கொண்டு கிணறு அமைத்து நீர் சேமிப்புத்தொட்டிகளை கட்டி நீர் சேமிக்கும் தொட்டிக்கு ஈர்ப்பு மூலம் நீரை பெற்றுக்கொள்ள நீர் குழாய்களை பொறுத்த நடவடிகடகைகள் எடுக்கப்பட்டுள்ளது. இனி வரும் காலங்களில் மானியங்கள் ஒதுக்கப்பட்டால் எஞ்சியுள்ள நீர் கழாய்களை பயன்படுத்தி செயற்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கிறேன். |

### 3.3.3 இனங்காணப்பட்ட இழப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2014 ஆம் ஆண்டு ஓபல்கல குடிநீர் செயற்திட்டத்தை துவக்கி வைக்கும் தொழில் நடாத்தப்படவில்லை என்றாலும் , 2014 ஒக்டோபர் மாதத்தில் செலுத்தப்பட்ட ரூபா. 194,800 முற்பணம் 2019 ஏப்ரில் 30 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சும்மந்தப்பட்ட பொறுப்புதாரிகள் கண்டரியப்பட்டு பொறுத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இச் செயற்திட்டத்தை நடாத்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதும் ஒப்பந்தத்திற்கேற்ப வேலைகள் பூர்த்தி செய்யப் படாமைக்கு அமைவாக தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கிடையில் மத்தியஸ்த சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 3.3.4 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2012 ஜனவரி 05 ஆம் திகதிய 01/2012 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் 3.2 இற்க்கு ஏற்றவாறு பதிவிடுதல் மற்றும் தகுதியை உறுதி செய்யாமல் 7 சமூக சேவை அமைப்புகளுடன் ரூபா. 1,700,000 பெறுமதியான ஒப்பந்தமிடப்பட்டிருந்தது. | சுற்றுநிருப அறிவுரைகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் அதற்கமைய அமைய நடவடிக்கைகள் எடுப்னே. |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 23 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கபபட்டிருந்தது. | நியமிக்கப்பட்ட திகதியில் கணக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் இந்த குறைபாடுகள் நிகழாதிருக்க பொறுப்பேற்பதாக தெரிவித்துக் கொள்கிறேன். |